அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.379

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
1987, செப்டெம்பர் 25 ஆந் (

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

ஆடசேர்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்படவுள்ள
பிற கல்வித் தகைமைகள்

தொடர்புடைய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளன வற்றிற்கு மாற்றுத் தகைமைகளாகப் பின்வரும் கல்வித் தகைமைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

..6

3

| புதிய கல்வித் தகைமைகள் | அத்தகைமைகளுடன் ஒப்பிடத்தக்க பிற கல்வித் தகைமைகள் | மேலும் விபரங்களுக்கு |
|---|---|---|
| 1. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அளிக்கப்படும் அரசாங்க நிதிமுகாமையில் டிப்ளோமா (அ.நி.மு.டி.) | இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தகுதிகாண்நிறைப் பரீட்சை, பட்டய முகாமைக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐ.இ) - தொழிற்துறைப் பரீட்சை 1, சான்றுபெற்ற கட்டுரிமைக் கணக்காளர்கள் அவை தொழிற்துறைப் பரீட்சை 1-சான்றிதழ்கள். | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தொடர்பு இல. பீ 400/84 |
| 11. களனியா பல்கலைக்கழகத்தின் நூலக விஞ்ஞானம், ஆவணப்படுத்தலில் தொழிற்துறை உயர்தரச் சான்றிதழ் | களனியா பல்கலைக்கழகத்தின் நூலக விஞ்ஞானத்தில் பட்டம். இலங்கை நூலக அவையின் இறுதிப் பரீட்சைச் சான்றிதழ், | களனியா பல்கலைக்கழகம், இலங்கை, தொடர்பு இல. விசி/எம்.ஐ.என். |
| 111. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்படும் முகாமை ஆய்வில் டிப்ளோமா சான்றிதழ். | தொழில்நுட்பக் கல்லூரிகளினால் அளிக்கப்படும் வர்த்தகத்தில் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ். இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் அளிக்கப்படும் வர்த்தகத்தில் டிப்புளோமா சான்றிதழ் | உயர்கல்வி அமைச்சு தொடர்பு இல. கஏ /5/14/7 |
| 1V. ஐ.இ.புடவை நிறுவகத்தின் தொழிற்துறைத் தகைமைகள் | இரசாயன நிறுவகத்தின் (லண்டன்) தொழிற்துறைத் தகைமைகள் | உயர்கல்வி அமைச்சு தொடர்பு இல. சஏ /4/6/13 |
| (அ) Fellowship (F.T.I.) கழக உறுப்பினர் நிலை | (அ) Fellowship (F.R.I.C.) கழக உறுப்பினர் நிலை | |
| (ஆ) Associateship (A.T.I.) துணைமையாளர் நிலை | (ஆ) Associateship (A.R.I.C.) துணைமையாளர் நிலை | புடவைப்பயிற்சி சேவைகள் நிலைய தொடர்பு இல. ரி.எஸ்.சீ/ஏ.டீ/ |

02. தொடர்புடைய ஆட்சேர்ப்புத் திட்டத்தைப் பரிசீலனை செய்து பொருத்தமான விடயத்தில் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் புதிய கல்வித் தகைமைகளை சேர்ப்பிக்குமாறு தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

03. இச்சுற்றறிக்கையின் பொருளடக்கத்தை தங்களுடைய அமைச்சின் கீழுள்ள சகல கூட்டுத்தாபனங்களினதும் நியதிச்சட்ட சபைகளினதும் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

ஒப்பம்: எம்.எம்.ஜுனைட்.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.